# HRMI தரவுப் பாதுகாப்பும் தனியுரிமைக் கொள்கையும்

HRMI தன்னுடைய குடிமையியல், அரசியல் உரிமைகள் அளவீடுகள் உருவாக்கத்தின் ஒரு பகுதியாகத் தனிப்பட்ட மற்றும் நுண்ணுணர்வு தேவைப்படும் தகவல்களைத் திரட்டுகிறது. இந்த இரு தரவுத் தொகுப்புகளும் தனித்தனியாகச் சேமிக்கப்படுகின்றன:

1. கருத்தாய்வுக்குப் பதிலளிக்கக்கூடிய வல்லுநர்கள், அவர்களைப் பரிந்துரைத்த மக்களுடைய பெயர், தொடர்புத் தகவல்கள் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்கள்.
2. எங்கள் வருடாந்த வல்லுநர் கருத்தாய்வுக்கு வந்த பதில்கள் (அடையாளம் காணப்படாதவை/அநாமதேயமானவை).

உங்களைப் பற்றி நாங்கள் தக்கவைத்திருக்கும் எந்தத் தனிப்பட்ட தகவலின் பிரதியையும் கேட்கின்ற உரிமை, அது தவறு என்று நினைத்தால் அதைத் திருத்தச் சொல்கின்ற உரிமை, அதை நிரந்தரமாக அழிக்கச் சொல்கின்ற உரிமை உங்களுக்கு உண்டு. நீங்கள் உங்களுடைய தகவல்களின் பிரதி ஒன்றைக் கேட்க விரும்புகிறீர்கள், அல்லது, அதைத் திருத்தும்படி கேட்க விரும்புகிறீர்கள், அல்லது, அதை நிரந்தரமாக அழிக்கும்படி கேட்க விரும்புகிறீர்கள் என்றால், தயவுசெய்து, survey@humanrightsmeasurement.org என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்

மேற்கண்ட தகவல்களை நாங்கள் எப்படிப் பாதுகாப்பாக வைக்கிறோம் என்பதைப் பின்வரும் பகுதி விளக்குகிறது.

## 1. கருத்தாய்வுக்குப் பதிலளிக்கக்கூடிய வல்லுநர்களுடைய பெயர்களும் தொடர்புத் தகவல்களும்

இந்தத் தகவல் இரண்டு நிலைகளில் திரட்டப்படுகிறது. முதலில், HRMI ஆல் நியமிக்கப்பட்ட தூதுவர்கள், அதாவது, எங்கள் உள்ளூர்க் கூட்டாளர்கள், எங்கள் நம்பிக்கைக்குரிய கூட்டாளர் அமைப்புகள், அத்துடன் சில சூழ்நிலைகளில், ஏற்கனவே கருத்தாய்வுக்குப் பதிலளித்துள்ளவர்கள் மனித உரிமைகளை வலியுறுத்திப் பின்பற்றுவோரைக் கருத்தாய்வில் சேர்ப்பதற்கு (ஒரு பாதுகாப்பான நிகழ்நிலைப் படிவத்தின் வழியாக) பரிந்துரைக்கலாம். இதையடுத்து, பரிந்துரைக்கப்பட்டவர்களிடம் அவர்கள் இந்தக் கருத்தாய்வில் பங்கேற்க விரும்புகிறார்களா என்று கேட்கப்படுகிறது. அவர்கள் இதற்கு ஒப்புக்கொண்டால், ஒரு பாதுகாப்பான நிகழ்நிலை ஒப்புதல் படிவத்தின் வழியாக அவர்கள் தங்களுடைய பெயரையும் மின்னஞ்சல் முகவரியையும் வழங்குகிறார்கள். எங்கள் பாதுகாப்புக் கொள்கையின் முதன்மையான அம்சங்கள்:

- அனைத்து நிகழ்நிலைப் படிவங்களும் SSL சான்றிதழைக் கொண்ட, https மூலம் பாதுகாக்கப்படுகிற HRMI இணையத்தளத்திலிருந்து வழங்கப்படுகின்றன. இதன் பொருள், தகவலானது பரிமாற்றத்தில் உள்ளபோது பாதுகாப்பாக (மறைகுறியாக்கப்பட்டு) உள்ளது.
- ஒப்புதல் படிவத்தின் வழியாகச் சமர்ப்பிக்கப்படும் பெயர்கள் மற்றும் மின்னஞ்சல்கள் எங்கள் வாடிக்கையாளர் உறவு மேலாண்மை (CRM) மென்பொருளுக்கு நேரடியாக (மறைகுறியாக்கப்பட்டு) அனுப்பப்படுகின்றன. மேகக் கணிமை (cloud-based) அடிப்படையிலான இந்த CRM, 27001, 27017 மற்றும் 27018 உள்ளிட்ட பொருந்துகின்ற அனைத்துப் பாதுகாப்பு ISO தரநிலைகளிலும்

சான்றளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அனைத்துத் தகவல்களும் மறைகுறியாக்கப்பட்ட வடிவில் பெறப்படுவதும், கையாளப்படுவதும், தக்கவைத்துக்கொள்ளப்படுவதும் உறுதிசெய்யப்படுகிறது. நியூசிலாந்தை அடிப்படையாகக் கொண்ட HRMI பணியாளர்களின் சிறு குழு ஒன்று மட்டும்தான் இந்த CRMஐ அணுக இயலும்.

- கருத்தாய்வுக்குப் பதிலளிக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் HRMIன் நிகழ்நிலை வல்லுநர் கருத்தாய்வுக்கான தனித்துவமான இணைப்பு ஒன்றை அனுப்புவதற்கு HRMI இந்தத் தகவலைப் பயன்படுத்துகிறது.
- கருத்தாய்வில் சேர்க்கப்படுவதற்கெனப் பரிந்துரைக்கப்பட்ட, ஆனால், ஒப்புதல் படிவத்தை நிறைவு செய்யாத மக்களுடைய பெயர்கள் CRM தரவுத்தளத்தில் சேர்க்கப்படுவதில்லை. ஒவ்வோர் ஆண்டும் தரவு வெளியீட்டுக்குப்பின் பரிந்துரைத் தகவல்கள் அனைத்தும் நீக்கப்படுகின்றன.

## 2. கருத்தாய்வுப் பதில்கள்

இந்தக் கருத்தாய்வு, SSL சான்றிதழைக் கொண்ட, https மூலம் பாதுகாக்கப்படுகிற Qualtrics இணையத்தளத்திலிருந்து வழங்கப்படுகிறது. இதன் பொருள், உள்ளிடப்படுகிற, அனுப்பப்படுகிற அனைத்துத் தகவல்களும் மறைகுறியாக்கப்படுகின்றன. IP முகவரிகள் சேமிக்கப்படுவதில்லை. Qualtrics பதில் தரவைப் பன்னாட்டுப் பிரச்சனைகளின் ஆய்வுக்கான ஜார்ஜியா பல்கலைக்கழக (UGA) மையத்தை (GLOBIS) அடிப்படையாகக் கொண்ட, HRMI பணியாளர்களுடைய சிறு குழு ஒன்று மட்டும்தான் அணுக இயலும்.

கருத்தாய்வுக்குப் பதிலளிப்போருடைய முதன்மையான ஆபத்து வாய்ப்பு, ஒருவேளை அவர்களுடைய மின்னஞ்சல் தவறாக அணுகப்பட்டால், அல்லது, அவர்கள் கண்காணிப்பின் கீழ் இருந்தால், அவர்கள் HRMIயுடன் உரையாடுகிறார்கள் என்பதை எதிர்க் கருத்து கொண்ட முகவர்கள் காணலாம், அவர்கள் ஒருவேளை எங்களுடைய குடிமையியல், அரசியல் உரிமைகள் அளவீட்டுக்குப்[1] பங்களிக்கக் கூடும் என்பதை அறியலாம். ஆனால், அநேகமாக, அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்தாய்வுத் தகவல்களை அணுக இயலாது. இதற்கு ஒரே விதிவிலக்கு, ஒருவேளை பதிலளிப்பவர் விசைப் பதிவு செய்தல் (Keyloggin) போன்றவற்றைக் கொண்ட கண்காணிப்பின்கீழ் இருந்தால், அந்தச் சூழ்நிலையில் பதிலளிப்பவர் இந்தக் கருத்தாய்வுக்கு அளித்த சில பதில்கள் பாதுகாப்பற்று இருக்கலாம். இது கவலையை அளிக்கும் ஒரு விஷயமாக இருந்தால், பதிலளிப்பவர்கள் நம்பிக்கையான, யாருடனும் பகிர்ந்துகொள்ளப்படாத, பதிலளிப்பவர் முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள கருவிகளைப் பயன்படுத்தி இந்தக் கருத்தாய்வை நிரப்ப வேண்டும், அத்துடன், நிகழ்நிலைக் கண்காணிப்பிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான மற்ற வழிகாட்டுதல்களைப் (எங்கள் இணையத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன) பின்பற்றவேண்டும் என்று நாங்கள் மிகவும் ஊக்குவிக்கிறோம்.

Qualtrics வழியாக HRMI பெறும் கருத்தாய்வுப் பதில்கள் அடையாளம் காணப்படாதவை. அதாவது, நாங்கள் பதில்களைத் தனிப்பட்ட கருத்தாய்வுப் பதிலளிப்போருடன் இணைப்பதில்லை. எனினும், அரிய சூழ்நிலைகளில், வழங்கப்பட்ட Qualtrics பதில்களில் சிலவற்றைப் பயன்படுத்திச் சில பதிலளித்தோரை அடையாளம் காண இயலக்கூடும். அதனால், நாங்கள் 1 (இரகசியமானது) என்பதில் தொடங்கி 3 (பொதுவானது) என்பது வரை 3 வெவ்வேறு நிலைத் தரவுப் பாதுகாப்பை அடையாளம் கண்டுள்ளோம்.

- **1 - இரகசியமானது:** UGAல் உள்ள HRMI பணியாளர்கள் Qualtrics வழியாகப் பெற்ற தொடக்க, மூலத் தரவில் அனைத்துப் பண்பறிதற்குரிய, அளவறிதற்குரிய பதில்களும் உள்ளன. இந்தத் தரவுகளைச் செயல்முறைப்படுத்திய பிறகு, அவை Qualtrics வழங்கியிலிருந்து நீக்கப்படுகின்றன. பாதுகாப்புப் பயிற்சி கொண்ட, பொருந்தக்கூடிய ஆராய்ச்சியை நடத்துகிற நபர்கள் மட்டும் தான் இதை அணுக இயலும். பதிலளித்தோரை அடையாளம் காண்பிக்கக்கூடிய அனைத்துத் தகவல்களும் அழிக்கப்படுகின்றன.

- **2 - ஆராய்ச்சித் தரவு:** முழுமையாக அடையாளம் காட்டப்படாத கருத்தாய்வுப் பதில்கள். இவை ஆராய்ச்சியிலும், HRMI அளவீடுகளைக் கணக்கிடுவதற்கும் பயன்படுத்தப்படும். இந்தத் தரவு முற்றிலும் பெயரற்றது என்பதால், எந்தச் சிறப்புப் பாதுகாப்பும் தேவையில்லை. இந்தத் தரவுகளை HRMI பதிப்பு அமைப்புகளுடன் பிரதியெடுத்தல் தரவாக நிகழ்நிலை வழியாகப் பகிர்ந்து கொள்ளலாம்.
- **3 - பொதுவானது:** தொகுக்கப்பட்ட தரவு HRMI உரிமைகளைப் பின்தொடர்வானில் HRMI அளவீடுகளாகப் பதிப்பிக்கப்படுகிறது. இதை HRMI இணையத்தளத்திலிருந்து நேரடியாகப் பதிவிறக்கலாம்.

---

[1] இந்த ஆபத்தைத் தணிப்பதற்கு, கருத்தாய்வுக்குப் பதிலளிக்கக்கூடியவர்கள் நிகழ்நிலைக் கண்காணிப்பிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்பதற்கான தகவல்களை நாங்கள் வழங்குகிறோம்.